**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.28/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனுசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : துரை (எ) துரைகண்ணு | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : காவேரிராஜபுரம் காலனி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**23.01.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

8. 2012ல் இருந்து இன்றைய தேதிவரையிலான தொடர்ச்சியான வரிரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். எனது பெரியப்பா சந்திரகேசுக்கு ஊரில் விவசாய நிலம் உள்ளது என்றால் சரியல்ல. அவருக்கு விவசாய நிலம் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனது பெரியப்பா சந்திரகேசுக்கு ஊரில் விவசாய நிலம் உள்ளது என்றாலும் அவர் அதற்கான விலை பொருட்களை வழக்கு சொத்தில்தான் வைத்திருப்பார் என்றாலும் சரியல்ல. அது என்னுடைய வீடு. அவருடைய வீடு அல்ல. நானும் என் தம்பி சின்னப்பனும் துரைகண்ணுவிடமிருந்து வாங்கி வீடு கட்டியுள்ள இடத்திற்கு வழியில்லை என்பதால் நாங்கள் வாதியிடம் தகராறு செய்கிறோம் என்றால் அந்த இடத்திற்கும் இதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அது விவசாய நிலமாகும். கிரையம் வாங்கவில்லை. அது அப்படியேதான் உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நானும் என் தம்பியும் வாங்கிதான் என் தம்பி வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. என் தம்பி வாங்கியுள்ள இடத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. என் தம்பி தனியாக உள்ளார்.

9. அந்த இடத்தில் ஏற்பட்ட தகராறில் நாங்கள் வாதியின் இடத்தில் தகராறு செய்கிறோம் என்றால் சரியல்ல. அவர் ஊரிலே இல்லை. வீடும் கட்டவில்லை. நாங்கள் தகராறு செய்யவில்லை. நான் ஊர்காவல் படையில் இருப்பதால் என் அதிகாரத்தை பயன்படுத்தி அத்துமீறி நுழைந்து தகராறு செய்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா

காலத்தில் இருந்து நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். என் தாத்தாதான் வாதி சங்கருக்கும் தாத்தா என்றால் ஆமாம். நாங்கள் இருவரும் பங்காளிகள்தான். தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றாலும் நாங்கள் காலி செய்து ஒப்படைக்க கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. வாதியின் வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)